TIPS FOR PARENTS

# EQAO Testing



## 3 மற்றும் 6ஆம் தரங்களுக்கான EQAO சோதனைகள்

கல்வித் தரத்திற்கான பொறுப்புடமை அலுவலகம் (EQAO) மாகாண அரசின் ஒரு முகவரகமாகும் (அமைப்பாகும்). EQAO 3, 6, 9 மற்றும் 10ந் தரங்களில் உள்ள மாணவர்களுக்கான பரீட்சைகளைத் தயாரிப்பதுடன் அவற்றினை மேற்பார்வையும் செய்கிறது. 3ஆம் மற்றும் 6ந் தரத்தில் உள்ள எல்லா மாணவர்களும் இச் சோதனையினை மே மாத இறுதியில் அல்லது ஜூன் மாத தொடக்கத்தில் ஆறு நாட்களில் எழுதுவார்கள்

### 1. மாணவர்கள் ஏன் சோதிக்கப் படுகிறார்கள்?

வாசிப்பு, எழுத்து மற்றும் கணிதம் ஆகியவற்றில் மாகாணத்தின் எதிர்பார்ப்புக்களை மாணவர்கள் எந்த அளவினுக்கு கற்றுள்ளார்கள் என்ற தகவலை பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், மற்றும் கல்விச் சபைகளுக்கு இச் சோதனைகள் தருகின்றன.

### 2. பெறுபேறுகள் எதனைத் தெரிவிக்கின்றன?

உங்கள் பிள்ளையினுடைய திறன்கள் இவை என அறிக்கை குறிப்பிடுபவை:

படிநிலை 1. மாகாணதிற்கான தரத்திலும் கீழே
படிநிலை 2. மாகாணத்திற்கான தரத்தினை அடைவதற்கு அண்மையாக உள்ளார்
படிநிலை 3. மாகாணத்திற்கான தரத்தில் உள்ளார்
படிநிலை 4. மாகாணத்திற்கான தரத்திற்கு மேலே

### 3.சோதனைப் பெறுபேறுகள் எவ்விதமாக உபயோகிக்கப் படுகின்றன?

வாசிப்பு, எழுத்து மற்றும் கணிதத்தில் மாணவர்கள் எவ்விதம் செயற்பட்டுள்ளனர் என்பது பற்றிய அறிக்கை ஒன்று அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கிடைக்கும். அதிகமான மாணவர்கள் குறிப்பிட்ட திறன் ஒன்றிலே குறைவாக செயற்பட்டிருந்தால், அவர்கள் மேலும் திறமையாக செயற்பட உதவுதற்கான உக்திகளையோ அல்லது மூலவளங்களையோ கண்டறிய ஆசிரியர்கள் முயற்சி எடுப்பார்கள். அதிகமான பாடசாலைகளின் மாணவர்கள் இதே தன்மையான கஷ்டங்கள் உடையவர்களாயின் எல்லாப் பாடசாலைகளும் கற்பித்தல் உத்திகளை மேம்படுத்த வேண்டும் அல்லது சிறந்த மூலவளங்களைப் பெறவேண்டியுள்ளது என்பதை கல்விச் சபைகள் இதன் மூலம் அறிந்து கொள்ள முடியும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளுடைய பெறுபேறுகளை இலையுதிர் காலத்தில் பெற்றுக் கொள்வார்கள். மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றிய பாடசாலைகளுக்கே அவர்களது பெறுபேறுகள் அனுப்பி வைக்கப் படும். பாடசாலையை விட்டு நீங்கிய மாணவர்களின் பெறுபேறுகளை பாடசாலை அவர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என எதிர் பார்க்கப் படுகிறது. நீங்கள் வதிவிடத்தை மாற்றிக் கொண்டீர்களானால் அப் பெறுபேறுகளைப் பெற வேண்டுமாயின் புதிய விலாசத்தைப் பாடசாலைக்கு அனுப்பி வையுங்கள்.

### 4.இப் பெறுபேறுகள் பிள்ளையினுடைய தேர்ச்சி அறிக்கை அட்டையைப் பாதிக்குமா?

இல்லை. 3ஆம் மற்றும் 6ந்தர சோதனைகள் மாணவர் பெறும் புள்ளிகளின் பகுதியாக அமையாததுடன் அவர்களுடைய கல்வி முன்னேற்றத்தையோ பாடசாலையில் அவர்களுக்குரிய வருங்கால வாய்ப்புக்களையோ பாதிக்கமாட்டா. என்றாலும், ஒன்ராறியோ இரண்டாம் நிலைப்பாடசாலை வருங்கால வாய்ப்புக்களையோ பாதிக்கமாட்டா. என்றாலும், ஒன்ராறியோ டிப்புளோமா பெறுவதற்கு 10ந் தர எழுத்தறிவுச் சோதனை அல்லது எழுத்தறிவுப் பாடநெறியில் சித்தியடைய வேண்டியது அவசியம்.

### 5.ESL கற்கும் மாணவர்கள் இச் சோதனை எழுதுவார்களா?

ஆம், எனினும் அண்மையில் கனடாவிற்கு வந்துள்ள சில ESL மாணவர்கள் விலக்குரிமை பெறமுடியும். ஏனையவர்களுக்கு சோதனை எழுதுதற்கு, கூடிய நேர அவகாசம், அமைதியான சூழல் அல்லது அறிவுறுத்தல்களையும் வினாக்களையும் வாசித்து விட ஒருவரை தந்து உதவுவது போன்ற "வசதிகள்" கிடைக்கலாம். ஒரு மாணவனுக்குச் சோதனையின் போது வசதிகள் செய்து கொடுப்பது அல்லது விலக்குரிமை தருவது பற்றி அதிபர் பெற்றோர்களுடன் ஆலோசனை செய்ய வேண்டும்.

### 6.விசேட தேவைகள் உள்ள மாணவர்கள் இச் சோதனைகளை எழுதுவார்களா?

எல்லா மாணவர்களும் இச் சோதனையை எழுதுமாறு ஊக்குவிக்கப் பட்டாலும் விசேட தேவைகள் உள்ள சில மாணவர்களுக்கு விலக்குரிமை கொடுக்கப் படலாம். இம்மாணவர்கள் பொதுவாக தனிநபர் கல்வித் திட்டம் ( IEP)கற்பவர்கள். அத்திட்டத்தில் இவர்கள் பாடசாலையில் சிறப்பாகச் செயற்பட உதவும்" வசதிகள்" அல்லது " உதவிகள் "பற்றிய விபரமிருக்கும். இந்த "வசதிகள்" மாணவர்களுக்கு EQAO பரீட்சைகள் எழுதுதற்கும் உதவும். எழுதுதற்கு, கூடிய நேர அவகாசம், அமைதியான சூழல் அல்லது அறிவுறுத்தல்களையும் வினாக்களையும் வாசித்து விட ஒருவரைத் தந்து உதவுவது போன்றவற்றினையே இந்த வசதிகள் உள்ளடக்கும்.

ஒரு மாணவனுக்குச் சோதனையின் போது வசதி செய்து கொடுப்பது அல்லது விலக்குரிமை தருவது பற்றி அதிபர் பெற்றோர்களுடன் ஆலோசனை செய்ய வேண்டும்.

### 7. எனது பிள்ளைகளை அதற்குத் தயார்ப்படுத்த நான் எவ்விதம் உதவலாம்?

இச் சோதனைகளுக்கான விசேட ஆயத்தங்கள் என ஒன்றுமே தேவை இல்லை. இச் சோதனைகள் எப்படி இருக்கும் என்பதனை மாணவர்கள் விளங்கிக் கொள்வதற்கு உதவு முகமாக சில ஆசிரியர்கள் மாதிரி வினாக்களை மாணவர்களுக்குக் கொடுத்து உதவுவதுண்டு. உங்கள் பிள்ளை போதிய ஓய்வு பெறவும் பாடசாலையில் சரியான நேரத்தில் இருக்கவும் செய்வதே பிள்ளைக்கு உதவுவதற்கான மிகச் சிறந்த வழி.

### 8. மேலதிக தகவலை நாம் எவ்விதம் பெற்றுக் கொள்ளலாம்?

EQAO விற்கான இணையதளம் : www eqao.com பார்க்கவும். வசதிகள் மற்றும் விலக்குரிமை பற்றித் தகவல் பெற *கற்பிப்போர் மூலவளங்களுக்குச்* சென்று (Educator Resources) *நிர்வாக வழி காட்டியைத்* (Administration Guide) தேர்ந்தெடுக்கவும்.

people for Education
BECAUSE EDUCATION MATTERS MOST

Copies are available in several languages at *www.peopleforeducation.com.*

For more information, call 416-534-0100 or email: *info@peopleforeducation.com*
© People for Education 2009

THE ONTARIO TRILLIUM FOUNDATION
LA FONDATION TRILLIUM DE L'ONTARIO

toronto community foundation